உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சண்டபீசர்

# வல்லஸ்தலபுராணம்.

# அருணாசலேசரநுபூதி.

மகாமகோபாத்யாய டாக்டர்
உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

புதுவை

## சிவானந்தமூர்த்தி

நாயனார்

அன்புகூர்ந்து பாடியவை.

---

சென்னை:

வை. புஷ்பரதசெட்டியாரது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

[illegible]

# பன்னிரண்டாந் திருமுறையுட்சேர்ந்த

# பிரப்ந்தங்கள்.

---

| | | விலை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| விநாயகர்திருப்புகழ் போற்றிக்கலிவெண்பா | | 0 | 1 | 0 |
| விநாயகரநுபூதி | தமிழ் | 0 | 1 | 0 |
| விநாயகரலங்காரம் | ,, | 0 | 2 | 0 |
| சிவானந்தலகரி ... | கீர்வாணம் | 0 | 3 | 0 |
| தேவிமானதபூஜை | ,, | 0 | 1 | 0 |
| சிற்சத்தியஷ்டகம் | தமிழ் | 0 | 0 | 6 |
| சடையீசர் வல்லஸ்தலபுராணம் | ,, | 0 | 1 | 0 |
| சடையீசர் தேவாரப்பதிகம் | ,, | 0 | 0 | 6 |
| அருணசலேச ரநுபூதி | ,, | 0 | 0 | 6 |
| முருகர் மும்மணிகோவை | ,, | 0 | 0 | 6 |
| முருகேசர் பதிகங்கள் | ,, | 0 | 0 | 6 |
| சிதம்பரதோத்திர துவாதசம் | ,, | 0 | 0 | 6 |
| அம்பலவாணர் தோத்திரபஞ்சகம் | ,, | 0 | 0 | 6 |
| குருஸ்தோத்திர பஞ்சகம் | ,, | 0 | 0 | 3 |
| இலக்குமியந்தாதி ... | ,, ... | 0 | 1 | 0 |
| ஆத்மசொரூப விளக்கம் | கீர்வாணம் | 0 | 1 | 0 |
| ஸ்ரீராமர்சிவன்முத்தியடைந்த ஞானவாசிட்டம் | | 0 | 6 | 0 |
| ஆத்மபோதம் ... | கீர்வாணம் ... | 0 | 4 | 0 |
| திருக்குதிரிசிய விவேகம் | ,, | 0 | 2 | 0 |
| சொரூபலக்ஷணவிருத்தி | ,, | 0 | 1 | 0 |
| [illegible]த்தியஷ்டகம் | ,, | 0 | 0 | 6 |
| [illegible]ஷ்டகம் | ,, | 0 | 0 | 6 |
| [illegible] | ,, | 0 | 0 | 3 |
| [illegible] | ,, | 0 | 0 | 3 |
| [illegible]பஞ்சகம் | ,, | 0 | 0 | 3 |
| [illegible] | தமிழ் | 0 | 1 | 0 |

கணபதிதுணை.

# வல்லஸ்தலபுராணம்.

## விநாயகர்துதி.

வல்லநட்டிமான்மியம்மன்மைடைச்
சொல்லவந்தருகிஷ்டசித்திவிநாயகர்
மெல்லன்மாமலர்த்தாளிணைவணங்கியே
தொல்லையவல்வினைதீரத்துதிசெய்வாம்.

## நாட்டுச்சிறப்பு.

திருக்கிளர்சாந்திமண்டலங்கீழ்பால
சிறந்திடும்வல்லமாநாட்டின்
மருக்கிளர்சோலைவளமுநீண்டழனை
வளமையுமுரைதிடக்காலே
பொருப்படர்தோளான்நாட்டினும்பெரிதேல்
புகன்றிடற்குவமைவேறுளதோ
அருட்டிகழ்மூர்த்திதீர்த்தந்தலத்தி
னருமையுமுரைத்திடப்பெரிதே. (க)

## சிவஸ்தலமகிமை கூறியது.

இந்தமா தலத்தி னினிதுவீற்றிருக்கு மெம்பெருமான சடையீசன், சுந்தரி ஐயனும்பிகை யிடப்பாகஞ் சூழ்ந்தடிய வர்க்கருள் புரிந்து, அந்தரத்தமராடி மலர்போற்றி வருதின ம்பணிந்திட வருள்செய், மூர்த்துணாவடந்த சரிதையிற்சிலது முனஞ்செய் மாதவத்தி னுன் மொழிவாம், (உ)

ஆற்றுச்சிறப்பும் குடிகள் சிறப்புங் கூறியது.

பொன்னி மாநதி பெருகு றப் புலவளம் பெருகி
மன்னும் வேதியர் மறைநெறி மன்னர்செங் கோன்மை
பொன்னி யாதியாம் பொருள்பெரு குறப்புரி வணிகர்
செந்நெ லாதிய வளமலி தரச்செய் வேளாளர். (௩)

தேசம் நகர அரசு இவற்றின்பெருமை கூறியது.

பெரிது நீடிய சோழமண் டலத்தினிற் பிறங்கும்
கருவை மாநக ரிராஜநா னியதெனக் கவின்கொள்
உரிமையாமுசு குந்தர்சந் ததியுல கோங்கி
திருவி ளங்குசெங் கோன்முறை வழிவழி சிறந்து. (௪)

அரசாட்சி இராஜபரம்பரை முதலிய
வண்மை கூறியது.

இமைய மால்வரைத் தென்புறஞ் சேதுமட் டெங்கும்
சுமைகொள் சேடனோர்தோள்வலி யாற்சுமந் தளித்தே
அமைவில் நீள்வலிப் புலிக்கொடி யாக்கினைந் திகிரி
சமை தரத்திகழ் வளவர்சந் ததிதழைத் தோங்கும். (௫)

சைவ - வைணவ சமயமும் தவங்களும் அபி
விர்த்தியடைந்தமை கூறியது.

நெடிது நீள்புகழ் செம்பியர் சந்ததி நிறைந்து
சடிலமார் கங்கைச் சங்கரன் மால்சம யங்கள்
பொடிவெண் ணீற்றெரு புனைமணி காவியும் பொலிய
அடியர் நீடவம் வழுவறவெங்கணு மமைந்து. (௬)

சிதம்பரமுதலிய ஆயிரத்தெட்டு சிவஸ்த்தலங்
கள் பிரகாசித்தமை கூறியது.

தில்லை யம்பதி சிதம்பர முதற்சிவ தலங்கள்
எல்லை யின்றிய புவனத்தி லங்கங்கு மிசைகொள்
நல் வளஞ்செறி கங்கையாதிய நதிவாவி
மல்கு தீர்த்தி லாயிரத் தெண்டலம் வயங்க. (௭)

### சோழராஜர் சிவாலயப்பணிசெய்து சிவகலை விளங்கச்செய்தமை கூறியது.

உலகெலா மளித் தாண்டரு ளொருமுத லுளங்கொண்
டிலகு மன்பினு லெழிற்றிரு வாலயப் பணிகள்
தலை மிசைக்கொளும் வளவர்செம் பொருள்கொடு சகமத்
தலனி லெங்கணு ஞ் சிவகலை நிறைந்திடப் புரிந்தார். (அ)

### சீவர்கள் இகபரசித்தி பெறும்படி செங்கோல் நடத்தியமை கூறியது.

சீவ கோடிக ளிகபர பயன்பெறச் செங்கோல்
புவலிற் றிகழ் மனுமுறை வழாநெறி யியக்கி
ஆவலிற் பெறு மிம்மையிற் சுகம்பல வடைந்தும்
மூவி லம்மையு மருள்வழி யுய்ந்திடப் புரிந்தார். (கூ)

### தீமைகளொழிந்து தர்மங்கள் விர்த்தி யடைந்தமை கூறியது.

தீய்மையா மழுக்காறவா வெகுளிதீச் சொற்கள்
சேய்மை நீங்குற வறநெறிவழுவறத் திகழ்ந்து
வாய்மை யொப்புர வின்சொல்கற் பாதியவாய்ந்து
ஆய்மெய்ந் நூன்முறை வழுவற வெங்கணு மமைந்த. (கo)

### சிவகொடிகள் பகையின்றி கிர்தயுகதர்மம் போல கலியுக நடந்ததென்றது.

புலியொ டானின மொருதுறை நீர்புசித்திடவும்
சலி யராவொடு பருந்துமுற் பகையின்றிச் சார
கலியுந் துஷ்டசெந் துக்குண மாறியே நடக்க
கலியும் முன்யுக தருமத்திற் கவின்பெற நடந்த. (கக)

### அயல்மன்னர் கப்பங்கட்ட மந்திரிமுதலியசது ரங்கசேனைசூழ அரசாட்சிநடந்தது.

திசைக ளெட்டினுந் தங்குகா வலர்திறை யளக்க
அசைவில் பற்பல சதுரங்க சேனையு மமைந்து

இசையு மந்திரத் தலைமையர் சூழ்ந்தினி திருக்க
வசையில் பேரர சாட்சியே வுலகினும் வயங்கும். (கஉ)

சோழராச்சிய பரிபாலனத்தால் மங்களகரமுண்டாய் பகையும் அபஜெயமு நீங்கியது.

அபயர் சந்ததி முறைமுறை யரசியற் றிடுகால்
சுப மிகுந்திசை மங்கல மகிழ்ச்சியே துன்ன
நுப மிகுந்திருந் தான தர்மங்களுந் தழைக்க
அப ஜெயம்பகை யடைந்திடா தனேககால் நடந்த. (கங)

இவ்வாறிருக்குங்காலத்து சிலகுறும்பர் தமிழ்நாட்டில் செய்யுங்குறும்புகளை அரசன் கேள்வியுற்றது.

ஆன காலையிற் சிற்சில குறும்பர்க ளடைந்து
மான மார்தமிழ் நாட்டினிற் பலதுறை வதிந்து
கா னகத்தினும் வரையினுங் கரந்துறைந் திடுக்கண்
மே னிகழ்த்திட வரசர்கோன் றெரிதர விசைத்தார். (கச)

தூதர்களை விடுத்து குறும்பர் வல்லமையும் அவர் செய்குறும்புகளையு விசாரித்துவர ஏவியது.

தேசச் செய்திக டெரிந்துரை யொற்றரை விளித்து
ஆசிலாதநந் தேசத்தி லடைந்துள குறும்பர்
கூசிலா துறைந் தியற்றிடு குறும்புமற் றவர்தம்
வாசி தேர்படை வலியெலாம் வகையுற வறிந்து. (கரு)

மற் றவர்க்குள துணைவலி வதியிட வலியும்
கொற்ற மும்மவர் செய்திடு குறும்புமற் றியாவும்
முற்று நன்குற விசாரித்து முறையுறத் தெரிந்து
சொற் றிடும்படி யேவலுந் தொழுதவர் சென்றார். (கசு)

சென்றவொற்றர்கள் தேசங்களிற்போய் குறும்பர் இயல்பையறிந்து அரசற்குரைக்கின்றது.

சென்ற வொற்றர்க டேசதே சங்களிற் சென்று
துன்றி நீடிய குறும்பர்கள் திறத்தினைச் சூழ்வான்

ஒன்றி யன்னவ ருடன்கலந் தவர்க்குரி யவர்போல்
நின்ற வர்க்குள திறந்தெரிந் தரசன்முன் நிகழ்த்தும். (கஎ)

சோழ மண்டலம் பற்பல துறைகளிற் றொடர்ந்து
வாழ் குறும்பர்க ளியற்றிய கோட்டையு மகழும்
ஆழி வெம்படைத் தொகைபுலி கரடிக ளனேகம்
சூழ வங்கவர் கரந்துறைந் திரவிலே துணிந்து. (கஅ)

நாட் டிலேபல வூர்தொறும் புகுந்துநற் குடிகள்
ஈட்டு செம்பொருள் தானிய வகைகொள்ளை யிட்டு
வாட்டி யும்மவர் முயன்றுசெய் வளங்களு மழித்து
கூட்ட வெம்படை கொண்டுபல் குறும்புகள் செய்வார். (கக)

இன்ன வாறிவர் நாடொறு மியற்றுபல் கொடுமை
மன்னு காவலர் மறித்திட வெதிர்த்திட மலைந்து
பன்னு மன்னவர் தங்களைப் படைகொடு தாக்கி
அன்ன வீரர்செய் யனர்த்தங்க ளனேகமா மன்றே. (உ0)

தூதர்கள் விவரமாகக்கூறிய செய்திகேட்டு
அரசன் மந்திராலோசனை செய்தல்.

வெற்றி யோடவர் கொடுந்தொழில் விளைத்திடு தீமை
சொற் றிடற்கவை யனேகமென் றரசன்முன் சொல்ல
மற் றிதைக்கடிந் தவர்களைத் துரந்திடும் வகையை
உற்ற மந்திரத் தலைவர்கா வலர்களை யுசாவி. (உக)

சதுரங்கசேனை குறும்பர்மேற்செலுத்தியது.

காற் பெரும்படை குறும்பர்மேற் சென்றிட நவின்றான்
போற்று மன்னவை பெரிதுறச் சென்றுமேற் பொருந்தார்
ஆற்றன் மிக்கபல் கோட்டைக ளனைத்திலுஞ் சூழ்ந்து
ஏற்ற போரினி லிருபடை களும்பொரு தெதிர்த்து. (உஉ)

இருபடைகளும் யுத்தஞ்செய்து பகைக்குறும்
பர் புறங்காட்டி யோடியது.

ஈட்டி குந்தம்வேல் சிலையொடு மம்புக வொடுவாள்
வாட்ட மின்றியே யெடுத்திரு படைகளு மலைந்து

கூட்ட மார்பகைச் சேனைகள் குலைகொலைந் தொடுங்கி
ஓட்ட மாகியு மொளித்தவர் மேற்செய லுரைப்பாம். (௨௩)

## குறும்பர்கோட்டையுள் மறைந்து தேவியுபாசனையாற் படைவகுத்து பின்னும் யுத்தஞ்செய்தல்.

வஞ்ச னெஞ்சின ரடைந்துதங் கோட்டையுள் வசித்து
தஞ்ச மாயவ ருபாசிக்குஞ் சத்திகள் வலியால்
விஞ்சு மாயையாம் பற்பல சேனைகள் விதித்து
அஞ்சுறுதுமுன் போலவ ரடற்றொழில் புரிந்தார். (௨௪)

## இவ்வாறு நெடுநாள்மறைந்து வந்துவந்துசெய்யும் யுத்தமடங்காமையால் அரசன் சிவனைஉபாசித்தது.

நாளு நாளுமவர் வீறுகொண்டுசெய் ஈக்கமானகொலை
சாலவுங்கள், மூள மாளும்வகை மன்னர்வெம்படை மறித்து
மேலுமவர் வன்மையால, கோ ளிழைத்துவர நெடிதுநாளு
மவிறல் குன்றுறுதெழுதல் கண்டமன், வே ளடர்த்தபர மே
சனல்லருளை வேண்டிமெய்த்தவ மியற்றினான். (௨௫)

## பரமேசரிரங்கி எதிரோநின்ற நந்தியைநோக்கி பகைவரை நீக்கும்படி யருளியது.

தரும ராச்சியபரிபாலராமையையர் சந்ததிக்கருளு மெம்
பிரான், திருவுளத்தினி லிரங்கி மன்னன்மிகு தெவ்வர்வெவ்
வினைக ளோர்ந்திட, அருள் சுரந்துதன தருகிருந்ததிறல் நந்தி
யைக்கொடிய வடையலார், பொருபடைக்கடலை நொடியி
னிற் பொடிபடுத்தெனத் திசையை நோக்கினார். (௨௬)

## நந்தி கீழ்த்திசைமுகமாய்நின்றுபடையெடுத்து யுத்தஞ்செய்தல்.

கீழ்த்திசைப் புறத்து நின்று கிளர்ந்திடு மொன்னலாரை
போழ்ந்திடத் தக்கவெய்ய பொருபடை வெள்ள மேன்மேல்
சூழ்ந்தன திசைகளெட்டுந் துணுக்கமுற் றஞ்சியோட
வாழ்ந்திடு மொன்னலார் மேல் வகைபல படைவிடுத்தார்.()

### குறும்பர் சேனைக்கூட்டம்மடங்கி நாலுதிக்கில் ஓடியது.

கொடியகீள் குறும்பர் சேனைக்கூட்டங்க ளெழுந்து வெம்போர், கொடிதுசெய் துடன்றுற்றுநீள்வலி குன்றிப் பல்லோர், மடித்தனர் களத்திற் சில்லோர் மடங்கியே புறங்கொடுத்தும், அடைந்தனர் நாலுதிக்கி லச்சமுற்றோடிய பின்னும்.

### சிதறியசேனை புறநாட்டையழிக்கக் குடிகள் பரமேசனை யடைந்தது.

சிதறிய சேனைவெள்ளந் திகைத்துநாற் றிசையிலோடி
பதறியே வெம்போர்செய்யப் பாங்கரி லிருந்தநாட்டில்
வதிதரு மாந்தரெல்லாம் மகேஸ்வரர் வாழுநகோபில
கதியெனப் புகுந்துதம்மைக் காத்திட வேண்டினார்கள். ()

### திருமுல்லைவாயில் மாத்தூர்மண்ணிவாக்கம் சோமங்கலம் இத்தலத்துள்ள நந்திதேவர்.

மருமலகுசோலைவாவி வயல்வளம் பெரிதுவாய்ந்த
திருமுல்லை வாயில்மேன்மை சிறந்திடு மகிமைமாத்தூர்
பெருமைசேர் மண்ணிவாக்கம் பிறங்குசோ மங்கலத்தில்
இருமையு மெமையாளீச னெதிர்நின்ற நந்திதேவர். (௩௦)

### கீழ்த்திசைமுகமாய் நின்று குறும்பரையடக்கி நாசஞ்செய்தது.

குணதிசை முகமாநோக்கி குதிகொள்வெங் குறும்பர்சேனைத்
துணிவுடை வெள்ளமெல்லாந் துணுக்கமுற் றஞ்சத்தக்க
திணிபெரு படைகளோடுஞ் செருக்களத்தெழுந்துமாற்றார்
அணிகிளர் சேனையெல்லா மதஞ்செய்து நீக்கினாரே. (௩௧)

### அவர்கோட்டை நகரமாடகூடங்களைப் பிடித்து கொள்ளையிட்டு அப்பூண்டை யழித்தது.

கோட்டையு நகருமற்றைக் குலவுமா மாடகூடம்
ஈட்டங்க ளனைத்துந்தாளா யிடித்தவ ரீட்டுசெம்பொன்

நாட்டுபல் வளமுங்கொள்ளை நடுங்குறக் கொண்டப்பூண்டு
சேட்டமொன் றின்றி நீக்கித் தேசத்தை வாழ்வித்தாரே. ( ) )

இடுக்கந்தீர்த்த குடிகள் அரசன்தவத்தையுஞ் சிவ
னருளையும் நந்திவல்லமையையுந் துதித்தது.

பெரிதுநாட் குறும்பர் செய்யும் பேரிடரொழிந்து நாட்டார்
உரியதம் மரசன்செய்த வுயர்ந்தமா தவமும் வல்லப்
புரிசடை யீசர்திவ்வியப் பொருவிலா வருளு நந்தி
அரியநீள் வலியும் போற்றி யநுதினந் துதிசெய்தாரே.(௩௩)

அன்றுமுதல் நந்திதேவர் நாற்றிசையுநோக்கிக்
கீழ்முகமாய் நின்றது.

மேலுமெய்க் குறும்பும்வாரா விதமெமை யாளுநந்தி
நாலுமா மறைகள்போற்று நாதனை மனத்துட் கொண்டு
சேலுறழ் தடங்கணம்மை ஜபனும்பா ளருளிருலே
நாலுதிக் கினையுநோக்கி நவின்றகீழ் முகமாய்நின்றார். (௩௪)

இத்தல மகிமையுணர்ந்த பிரமவிஷ்ணுக்கள்
துதிசெய்து இத்தலவாசஞ்செய்தது.

இத்தலத் திருந்தெம்பெருமா னினிதருள புரியுமேன்மை
அத்தலத் தமரர்வேந்து மயன்றிருமாலு மோர்ந்து
சித்தவற் புதமடைந்தித் திருந்தலத் தடைந்தன்பாலே
அத்தனைத் தொழுதிறைஞ்சி யநேகநாள் வாசஞ்செய்தார்.()

அரசர்கள் சிந்தையற்றுவாழ்ந்து தேவாராதனை
முதலிய திருவிழா நடத்தியது.

இந்தவா றனேககால விடரொலா மொழிந்துவேந்தர்
சிந்தனை யின்றிவாழ்ந்து செல்வமேன் மேலாயோங்க
எந்தையெம் பெருமாள்பூஜா ராதனை யினிதியற்றி
முந்துபல் விழாவுநன்கு முறைமுறை யியற்றினாரே. (௩௬)

தேசஞ்செழிக்க மும்மாரிபெய்து அரசும்
குடிகளும் குலாவி வாழ்ந்தனர்.

நாடெலாஞ் செழிக்கவான நாளுமும் மாரிபெய்ய
நீடிய குடிகளோங்க நில்வளம் பலவுமல்க

மாடமா ளிகையிற்சுற்ற மறையவர் மற்றுநண்பர்
கூடியே யுண்டுடுத்துக் குலாவியின் றினிதுவாழ்ந்தார். (௰௭)

## இவ்வாறு செங்கோல்நடந்துவர சிலவதிகாரிகள் தீமையாற் குடிகள்வாடி நோன்புசெய்தல்.

சந்ததி பெருகமன்னர் சதுர்பெறு செங்கோலோச்சி
சிந்தனை யற்றுவாழ்ந்து செல்வமோ டிருக்குங்காலை
வந்துறு மதிபர்சில்லோர் மருவிய தீமையாலே
நொந்துறு குடிகள்வாடி நோன்புகள் பலவுஞ்செய்தார். ()

## சடையீச ரருள்கூர்ந்து முன் தவஞ்செய்த சோழர் சந்ததிக்கதிகாரமளித்து இடர்நீக்கவெண்ணி.

உலகமுற் றளிக்குமெந்தை யொளிர்சடை யீசர்நோக்கி
இலகமுற் றவஞ்செய்சோழ ரினியசந் ததிக்கேயிந்தத்
தலைமையை யளித்துநாடு தழைந்திடச் செய்வோமென்று
நிலைபெறு குடிகட்குற்ற நெடுந்துயர் நீக்குமாறு. (௰௯)

## முசுகுந்தர்சந்ததியிற்றோன்றும்முத்துக்குமரவேளும் குழந்தைவேலுக்கும் இந்நாடாளக்கொடுத்தார்.

முந்துமா தவஞ்செய்தோங்கு முசுகுந்தர் சந்ததிக்கண்
வந்துதவிய செங்குந்தர் மரபினிற் றோன்றும்வள்ளல்
இந்தமா தலத்தையாள யிசைமுத்துக் குமரவேளும்
மைந்தனுங் குழந்தைவேலு மன்னரா யரசாள்வித்தார். ()

## மாதமும்மாரிபெய்ய திருப்பணிமுதலிய நடத்தி வுலகு துதிக்க வாழ்ந்தனர்.

மாதமும் மாரிபெய்ய வளம்பல பெருகியோங்க
தீதெலா மொழிந்துசெல்வந் திகழ்தரச் சடையீசன்றன்
ஆதர வோடும்போற்றி யருந்திருப் பணிகளாற்றி
நாதனை மனத்துட்கொண்டு நாடெலாம்போற்றவாழ்ந்தார்.

மேறசந்ததியார் ஆளப்பெற்று குடிகளோங்கும்
படி யாசியல் நடக்கின்றது.

அனையர்சந் ததிகளின்றுமா சியற்றிடு மிந்நாடு
புனைபல வறங்களோங்கப் பொருவிலாச் செல்வமேவி
மனைநிலந் தனமேன்மேலாய் வளர்ந்திடப் பெருகிவாழும்
தனைநிகர் குடிகளோங்கச் சந்ததங் காக்கின்றாரோ. (௪௨)

மூவர் பாடல்பெற்ற சடையீசனைப்போற்றச்
சிவனடியார்க் குரைத்தது.

தேவதே வனைப்பணிந்து திருவொடும் வாழுநாட்டார்
மூவர்தம் பாடல்பெற்ற முதல்வர்சீர் மேனமேற்போற்ற
ஆவலாய் விரும்பியங்க வனைடைந்தமெய் யன்புநீங்கா
நாவலன் சிவானந்தப் பேர்நந்தமக் குரைத்தலோடும். (௪௩)

சிவனடியார் தேவாரப்பதிகங் கூறி முத்தி
மார்க்கங் காட்டியது.

சிதம்பர நடேசர்சேவை திருவுளத் தகலாதென்றும்
இதம்பெறத் துதிசெய்வேற்கிங் கிசைந்ததுந் தவமாமென்று
திதம்பெறு மன்பினாலே தேவாரப் பதிகங்கூறி
முதம்பெறு முலகம்போற்றி முத்திசேர் நெறியளித்தோம்.

வா ழ் த் து.

பரம்பர னருளாற்றோன்றும் பார்முத லண்டம்வாழ்க
நிரந்தர மானதெய்வ நியதிநல் லறமும்வாழ்க
தரந்தர மாகத்தோன்றித் தழையுயி ருயிர்கள்வாழ்க
புரந்தர கேரிநாடாள் பூபர்சந் ததியும்வாழ்க. (௪௫)

**சிறப்புப்பாயிரம்.**

சென்னை, வீரபத்திரசுவாமிகள் கருத்து.

இந்தமா தலத்தின்மேன்மை யெடுத்துமா முனிவர்கூற
முந்துமா முநியோர்கேட்டு முறைமுறை வழியேவந்த
அந்தவா றதனையூகித் தணிபெற வெடுத்துரைத்தார்
சிந்தைதீர் சிவன்முத்தர் சிவானந்த மூர்த்தியாரோ. (௪௬)

திருச்சிற்றம்பலம்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

# அருணாசலேசாநுபூதி.

## விநாயகர் துதி.

அருணாசலபதியிலத்திமுகன்பொற்றாள்
அருணற்கிளக்கவினிதாளும் - அருணா
சலப்பெருமைகூறச்சமைந்தவநுபூதி
நிலத்தடியார்நீள்பவநீக்கும்.

அண்ணா மலையங் கணர்சீர் கருதி
எண்ணா மலெவ்வ் வினைவீ டறவே
உண்ணா மலைபா துயர்தாள் பரவி
விண்ணா மலைதீர் விரிசீர் படிவாம். (௧)

அன்பா லுருவா கியவப் பரருள்
வன்பா லுறுதொண்டர் வளம் புகலி
இன்பா லகனீர்க்கவி மா மணிசுள்
முன்பா டருணா சலமுன் னவனே. (௨)

நீடுந் திருமா லயனே டரிதாய்
ஆடுங் கழனீண் முடியன் புருவாய்.
நாடும் மருணா சலநா யகனே
பாடும் பரிசே யருள்வாய் பதமே. (௩)

மாயோன் மலர்வே தியன்வாழ்த் தரிய
தூயோ னருணாசல சோதி மய
மாயோனை மனக்கமலத் தணை யார்
சேயோனை யடைந்தருள் சேர் மனமே. (௪)

வையத்துறை மாதவர் வாழத் தருணை
சையத்தொளி யாகிய தற் பரனே
செய்யத்தகு நீள்பணி செய் தறியேன்
உய்யத் தருவா யுனதா ரருளே. (௫)

பனிமா மதிசூடு பணை முடியார்
தனிமா லருணாசல தற் பரனே
உனிநின்ற விடத்துல கோர் பணிய
நனியாரரு ணற்கதி நல் குவனே. (௬)

வானோங்கி வளர்ந்த செழுஞ் சுடராய்த்
தானோங் கருணாசல சாம்ப சிவன்
கானோங் கலர்சேவடி கண்டு களித்
தேனோங்கு பவப்பிணி தீர் தரவே. (௭)

அலகில் புகழ்சே ரருணா சலமாய்
இலகும் பரனை யினிதாய் வலம்வந்
துலகம் பரவி யுயர்பே றடைதல்
தலம்வந் தடியேன் றரிசித் தனனே. (௮)

மஞ்சூர வயங்கரு ணாசல மாம்
அஞ்சோம னணிந்தரு ளா தவனை
நெஞ்சே யருணீநினை யக் கணமே
அஞ்சே லெனமுத்தி யளித் திடுமே. (௯)

அன்பர்க் கொரு துன்பணுகா தருள்செய்
மன்பொற் பதிமாலரு ணா சலமே
இன்பத் தரு வாகிய வீசருமென்
முன்புற் றருண்முத்தி யளித் தனரோ. (௧௦)

அடியார் குறைதீர்த் தருளற் புதன்வான்
முடியா ரருணா சலமுன் னவனைப்
படியார வணங்கி வலம் பரவும்
நெடியார் வினை நீக்கி யளித்திடுமே. (௧௧)

வாதித்தி கன்மாலயன் வாழ்த் தரிய
சோதிப் பொருளாகிய சோ ணகிரி
ஆதித்தனை யேத்தி யகங்கா நீ
பேதித் துளமே பெறுவாய் கதியே. (கஉ)

தனைவந் தடிதாழடி யார்க்கு மலால்
நினைகின் றயர்கின்ற விடத் தருளி
வினையின் வலிதீர்ந்திட வீடருள் சீர்
புனையும் மருணாசல புங்க வனே. (கங)

நானா திசைமாந் தருநற் றவரும்
வானோடரும் வந்து பணிந் திடவே
ஆனா வருள்செய் யருணா சலனை
நீனாடி நினைந்திடு நெஞ் சகமே. (கச)

முன்னே யயன்மால் முடிதா ளறியா
மன்னே யருணா சலமா னவனே
தன்னே ரிலதாந் தனிவான் சுடரோ
இன்னே யெனையா ளிடர்தீர்த் தரவே. (கரு)

தனமின் றியிலித் தரையிற் செயல்கள்
கனமின் றெனமிக் கவர்கட் டுறைபோல்
மனனின் றருளின் வழியே யொழுகத்
தனநன் றருள்வா யருணா சலனே. (கசு)

உலகிற் றனுவோ டுறுமுத்தி யினும்
சிலசிற் பொருள்கொண் டுசிறந் திடலால்
நலனிற் றருபொற் பொருணன் றருள்வாய்
நிலனிற் றிகழ்நீ ளருணா சலனே. (கஎ)

சிந்திப் பவர்சிந் தையுளின் றுலகில்
எந்தப் பதிநின் றெவர்செய் துதியும்
புந்திக் கினிதாய்ப் பொருடந் தருள்வாய்
அந்திப் பிறைசூ டருணா சலனே. (கஅ)

யான்றா னெனதென் றுறுமாயை கெட
தான்றா னிறையென் றுஜகந் தெளிய
வான்றோய் தரநின் றுவயங் கொளியே
ஆன்றோ ருளமன் னருணா சலனே. (௧௯)

இல்லை யெனுநாஸ் திகமொண் ணமற
நல்லோருணர் நான்மறை மெய்ப் பொருளே
எல்லோரு மிசைந்தியல் காட்சி பெறுந்
தொல்லா ரொளி சோணகிரிப் பரனே. (௨௦)

அணுவுக் கணுவாகி யகண்ட மதாய்
நணுகெப் புவனங்களு நண்ணிய சீர்
கணிதத் திலையென் பதுகண் டுலகம்
பணியத் திகழ் சோணகிரிப் பரனே. (௨௧)

ஒளியா யுலகெங்கும் விரிந்த சுடர்
தெளியா தவருந் தெளிசிந்தைய ராய்
எளிதா யுயர்முத்தி யிசைந் திடவே
அளியா ரருணாசல வற் புதனே. (௨௨)

தாந்தா முதலென்று தமைத் தெளியார்
ஆய்ந்தா ரறிவென் றுணரா தயன்மால்
சாய்ந்தா ரிகல்தாழ்ந்து தணிந் திடவே
வாய்ந்தா ரருணா சலவா னவனே. (௨௩)

வானாகி வயங்கிய பேரொளியே
தானா மறிவென்று ஜகந் தெளிய
உளனா ருடல்கொண் டுழலா துயிர்கள்
ஆனா வருள்சே ரருணா சலனே. (௨௪)

அடியார் முடியின்றி யகண்ட மதாய
நெடிதார் திசையெங்கு நிறைந்த சிவம்
முடியா முதலென் றுணர்முத்தர் தொழும்
வடிவா ரருணா சலமா நிதியே. (௨௫)

வேதாகம சாத்திரம் விள்ளரி தாம்
நாதாந்த நடுப்பொரு ளீதெனவே
ஓதா வுணர்யோகிய ருள்ளொளி யாம்
பீதா ரருணாசல மெய்ப் பொருளே. (உ௬)

வாதிந் துணரா மதவா திகளும்
ஆதிப் பொருளீ தெனவையமற
நித்தனி யாரொளியாய் நிறை வாய்
சோதித் தருள் சோணகிரிப் பரனே. (உ௭)

முதுகா ரணமின் றெனுமோக மதே
பொதிநாஸ் திகர்புந்தி தெளிந்திடவே
துதிகூறி நினைந்தவர் தொல்வினைதீர்
பதிமா லருணா சலபற் பதமே. (உ௮)

உடன் மேவியுலைந் திடுகோச மதே
திடமா முயர்கா ரணமென்று திகைந்
திடர்மூழ்கி யிளைத்திடு பேய்ச் சமயர்
படர்தீ ரருணாசல பார்த் திபனே. (உ௯)

முன்னூ லறியா முழுமூடர் சொலும்
பன்னூல் வழிவந்து பயன் பலியாச்
சின்னா ளயதீ மதமா றிடவே
மன்னா ரருணா சலமால் வரையே. (௩0)

தெவர்க் குண்முதற் றிருமா லயனும்
ஏவர்க்கு முயர்ந்த வர்யாவ ரென
தாவுற் றறியாமை தணித் தருளின்
மூவர்க் கருணாசல மூர்த்தி யதே. (௩௧)

வானாய் வளியா யனனீர் புவியாய்
தானா யொளிர்வெங் கதிர்தண் கதிராய்
யானா நிறையற் புதமான சிவம்
ஞானா கரனா மருணா சலனே. (௩௨)

ஈதன் றிதுவன் றெனநேதி செயூஉ
வேதங்கள் விதிக்கறி யாவொளி காண்
டேதங் கெடவெவ் வெவருந் துதிசெய்
நாதன் னருணாசல நா யகனே. (௩௩)

மருவுற் றுடல்வாழ்ந் தவர்நற் பதியின்
தெரிசித்த வர்சித்தி பெறும் பதியில்
பரிசித் துடல்வீழ்ந் தவர்வாழ் பதிமேல்
கருதற் கருணா சலநற் கதியே. (௩௪)

வானோங் கருணா சலமா முடியைத்
தானோங்கி யெழுந்து பறந்தய னும்
கானோங் கலர்தாழை கரிக்கொடு தான்
ஏனோ மருணாடி யிருந் திடினே. (௩௫)

முடியா வடிதேடி முயன் றிருமால்
படியா ரவகழ்ந்து பரிந்தி யுகம்
முடியா தெனவேக மொழிந்து தொழ
அடிகா ணருணா சலவற் புதனே. (௩௬)

அகம் பாயமகன் றவருந் தவர்கள்
சுகங்காண நிறைந் தொளிர் சோணகிரி
உகந்தா ருளமன்னிய வொண்சுடர் காண்
சகந் தேடியடைந் திடுசத் பொருளே. (௩௭)

சவலைச் சமயந் தலைசாய்ந் திடவும்
புவனத் தொளிர்சைவ புராண வழி
தவம்நற் கதிசார்ந் துலகுய்ந் திடவும்
நவமுற் றருணா சலநல்கு மதே. ௩அ))

அன்பே வடிவா யமர்நால்வர் தொழு
தின்பாட லிசைத்திடு பல்பதி யில்
முன்பா ரருணா சலமுத்தி முதல்
என்பார் சுகமெய் யுணர்வெய் தினரே. (௩௯)